

தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்டம், அண்ணாண்டப்பட்டி ஊராட்சியில மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ ஊட்டச்சத்து பெட்டகங்களை தாய்மார்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கே.ஆர்.திருப்பதி, ஊராட்சிமன்றத் தலைவர் சுரேஷ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அணி அமைப்பாளர் மேகநாதன், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மேகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




வேலூர் நாடாளுமன்ற உறுப்பினராக 2வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட டி.எம்.கதிர்ஆனந்த் சத்துவாச்சாரி வடக்கு – தெற்கு பகுதிகளில் பொதுமக்களிடம் நன்றி தெரிவித்தார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, மண்டல குழுத் தலைவர் வீனஸ் நரேந்திரன், தெற்கு பகுதிச் செயலாளர் எம்.ஏ.கணேஷ்சங்கர், வடக்கு பகுதிச் செயலாளர் ஆர்.பி.இ.சசிக்குமார் 21வது வட்டக் கழக செயலாளர் ஆர்.பி.ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### "திராவிட மாடல்" அரசின் திறன்மிகு மையங்களால் தெற்காசியாவிலேயே

# முதலீட்டாளர்கள் தொழில் புரிய உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 17 -

"திராவிட மாடல்" அரசின் திறன்மிகு மையங்களால் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மிகவும் பயனடைந்து வருகின்றன. முதலீட்டாளர்கள் தொழில் புரிய உகந்த மாநிலமாகவும், முதல் முகவரியாகவும் தமிழ்நாடு விளங்குகிறது என "தினகரன்" நாளேடு தலையங் கத்தில் பாராட்டு தெரிவித் துள்ளது.



தினகரன்

நவம்பர் 16, 2024 சனிக்கிழமை

முதலீட்டாளர்களின் முகவரி

2030ம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து தமிழ்நாடு முதல்வர் அதிவேக பாய்ச்சலில் சென்று கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வி சேர்க்கை விகிதமானது நாட்டின் சராசரியைவிட கூடுதலாக அதாவது 51.4 விழுக்காடாக உள்ளது. பல திறன்மிக்க பணியாளர்களை பெற்றிருப்பதால் பல வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது. சுவீடன் நாட்டை சேர்ந்த 4 புதிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் சென்னை, கோவையில் தொழில் முதலீடுகளை செய்ய முன்வந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே 70 சுவீடன் நிறுவனங்கள் செயல்பட்டு வரும் நிலையில் தற்போது மேலும் 4 நிறுவனங்கள் முதலீடுகளை செய்ய முன்வந்துள்ளதால் தமிழ்நாட்டை சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்த தமிழ்நாடு முதல்வர், 17 நாட்கள் அங்கேயே தங்கி 25 நிறுவனங்களுடன் மேற்கொண்ட சந்திப்பில் ₹7,618 கோடி மதிப்பிலான 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இதன்மூலம் 11,516 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதோடு அல்லாமல் அரசின் வேண்டுகோளை ஏற்று போர்டு

2030 ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அதிவேக பாய்ச்சலில் சென்று கொண்டுள்ளார். தமிழ்நாட்டில் உயர்கல்வி சேர்க்கை விகிதமானது நாட்டின் சராசரியைவிட கூடுதலாக அதாவது 51.4 விழுக்காடாக உள்ளது. பல திறன்மிக்க பணியாளர்களை பெற்றிருப்பதால் பல வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது. சுவீடன் நாட்டைச் சேர்ந்த 4 புதிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் சென்னை, கோவையில் தொழில் முதலீடுகளை செய்ய முன் வந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே 70 சுவீடன் நிறுவனங்கள் செயல்பட்டு வரும் நிலையில் தற்போது மேலும் 4 நிறுவனங்கள் முதலீடுகளை செய்ய முன்வந்துள்ளதால் தமிழ்நாட்டைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்த தமிழ்நாடு முதல்வர் அவர்கள், 17 நாட்கள் அங்கேயே தங்கி 25 நிறுவனங்களுடன் மேற்கொண்ட சந்திப்பில் ரூ.7,618 கோடி மதிப்பிலான 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இதன்மூலம் 11,516 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதோடு அல்லாமல் அரசின் வேண்டுகோளை ஏற்று போர்டு நிறுவனம் மீண்டும் தமிழ்நாட்டில் செயல்படவும் முன்வந்துள்ளது.

உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறை ஆகிய இரண்டிலுமே முன்னணியில் இருக்க வேண்டும். அப்போது தான் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை பெற முடியும் என்ற அரசின் கொள்கை முடிவுகளின் படி வெளிநாட்டு முதலீடுகளை மட்டுமே ஊக்குவிக்காமல் உள்நாட்டு தொழில் முயற்சியும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இதற்கேற்ப திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் சார்பில் ஐடி பார்க், டைடல் பார்க் தொடங்கப்பட்டு தொழில் நிறுவனங்களுக்கு வசதி வாய்ப்புகள் உருவாக்கி கொடுக்கப்படுகின்றது.

ஒரு காலகட்டத்தில் ஐடி நிறுவனங்களை சென்னை, பெங்களூரு, ஐதராபாத் போன்ற முன்னணி நகரங்களில் மட்டுமே காணமுடியும். ஆனால் இன்றைக்கு தமிழ்நாடு அரசின் திட்டமிட்ட செயல்பாடுகளால் 2ம் கட்ட நகரங்களிலும் ஐடி நிறுவனங்கள் வரத் தொடங்கி உள்ளன. அதே போல தமிழ்நாட்டில் தொழில் துறை என்றாலே சென்னை, கோவை மண்டலங்கள்தான் என்ற நிலை மாறி இன்றைக்கு எல்லாத் தொழில்களையும் எல்லா மாவட்டங்களிலும் தொடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நகரம், கிராமம் என பாகுபாடு பார்க்காமல் தொழில் கொள்கை வகுக்கப்பட்டுள்ளதால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்தில் உள்ள தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப தொழிற்சாலைகளும், தொழில் பூங்காக்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பின்தங்கிய மாவட்டமான அரியலூர் மாவட்டத்தில் ரூ.1000 கோடி செலவில் காலணி தொழிற்சாலை அமைக்கப்படும் என்றும், இதன் மூலம் 22 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து அந்த பணிக்கு நேற்று அடிக்கல் நாட்டியுள்ளார்.

தொழிற்சாலைகளை தொடங்குவதோடு நின்று விடாமல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு தயார்படுத்திக் கொள்ளவும், மேம்பட்ட உற்பத்திக்காகவும், அரசின் சார்பில் திறன்மிகு மையங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த திறன்மிகு மையங்களால் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மிகவும் பயனடைந்து வருகின்றன. தெற்காசியாவிலேயே தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாக மட்டுமல்லாது, முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகவும் தமிழ்நாடு மாறி வருகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம், நவ. 17-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் நாளை (18.11.2024 திங்கள் கிழமை) காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையிலும், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் 081 - கெங்கவல்லி க.ஆனந்த், விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 082 - ஆத்தூர் எம்.எஸ்.கணேஷ்குமார், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 083 - ஏற்காடு சி.ஆனந்தகுமார், மாநில இளைஞர் அணி துணை செயலாளர், 091 - வீரபாண்டி டி.கே.கிருபாகரன், ஈரோடு வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள், வாக்குசாவடி முகவர்கள் BLA-2 மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** வருகின்ற நவம்பர் 27ம் தேதி கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா,

வாக்குச்சாவடி கமிட்டி (BLC) அமைப்பது.

வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் சிறப்பு முகாம் நவம்பர் 23, 24 தேதியில் நடைபெறுவது தொடர்பாக

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### வேலூர் மாவட்ட மருத்துவ அணி

# துணை அமைப்பாளர் கோவி. தூயவன் மருத்துவமனை திறப்பு!

## ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. - டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. பங்கேற்றனர்!

வேலூர், நவ. 17-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் பெருமாங்குப்பம் கூட்டுச் சாலை அருகே, மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாநில துணை செயலாளர், பர்கூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சி. கோபியின் மகன் மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் கோவி. தூயவன் தொடங்க இருக்கும் மருத்துவமனையை, வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம் எல்.ஏ. ரிப்பன் வெட்டி திறந்து வைக்க, டி.எம் கதிர் ஆனந்த் எம்.பி. துவக்கி வைத்தார்.

இதில் ஒருங்கிணைத்த கே.வி.குப்பம் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே.சீதாராமன் (ஒன்றியக் குழுத் தலைவர்) லோ.ரவிச்சந்திரன், இரா.முருகேசன், குடியாத்தம் ஒன்றியச் செயலாளர்கள் இ.சத்தியாநந்தம் (ஒன்றியக் குழுத் தலைவர்), நத்தம் பிரிதீஷ், அன்பரசன், வி.கே.ஆர்.சுந்தரவடிவேலு, சா.பரிமளம் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில், துரை சிங்காரம், வி.டி.ஜெயக்குமார், சுதாசேகர், கே.கே. சிட்டிபாபு,லத்தேரி சிவகுமார் கே.வி.குப்பம் மூன்று ஒன்றிய கழகங்களின் நிர்வாகிகளான, இரா.தாமோதரம், ஏ.ஏழ்மைநாதன், ப. மடங்கி வெங்கடேசன், நளனி ராமமூர்த்தி, கட்டுக்கல் பாஸ்கர், கோ. இளங்கோ, வெ.ஜெயராஜ் கே.குப்பன், சி.மார்கபந்து, கீழ்புதூர் வெங்கடேசன், கவுன்சிலர் வேலு, உதயசூரியன், அசோகன், குட்டி (எ) தியாகராஜன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள். மஞ்சுளா, டி.இரவி, ஜி.ஆர். கிருஷ்ணமூர்த்தி, கே.பி.கருணாநிதி, டி.மேகநாதன், சிவகாமி, இராதிகா, வழக்கறிஞர்கள் ஜி.விஜயக்குமார், எஸ்.மோகன்ராஜ், ச.மோகன் (ஊ.ம.தலைவர்), தி.வி.க. மாவட்டடச் செயலாளர் இரா.சிவா, மாவட்ட திராவிட நட்புக் கழகச் செயலாளர் சா.குமரன், வி.எத்திராசன், பங்கடை கருணாகரன், இரா. பத்மநாபன், வி. டி.விஜயக்குமார் சி.மதியழகன், காவனூர் ச.சிவகுமார் ஆர்.சத்யா, எஸ்.டி.ரகு, இரா.முரளி, எஸ்.ரமேஷ், ஆசிரியர் இரவி, கா.சுரேஷ், வினோத்குமார், வீரா.குமரன், நாத. புஜங்ராவ், சே. கபில்தேவ், மு.பிரபு, சூரிய சுடர் வெங்கடேசன், இளைஞரணி சத்யா ஷியாம், அ.குப்பம் ஷியாம், திருஞானம், மாணவரணி, கரு.சிரிதர் ப.விஜய், இள.நவீன், அ. தமிழ் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

முடிவில் கோவி. அழகிரி, மாவட்ட மருத்துவரணி துணை அமைப்பாளர் மருத்துவர் கோவி. தூயவன் ஆகியோர் ஒருங்கிணைத்து, வரவேற்று நன்றி கூறினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பூண்டி கே. கலைச்செல்வன்

**நவம்பர் 17 (2007)**



**திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், திருவாரூர் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**மாவட்டத்தின் கழகத் தோழர்களுக்கெல்லாம் தோன்றாத் துணையாக விளங்கி, திருவாரூர் மாவட்டத்தில் கழகம் மென்மேலும் பீடுநடை போட தளர்விலாது பணியாற்றியவர். கொடியோர் சிலரால் படுகொலைக்கு ஆளானார்.**

**"சுழன்று சுழன்று கழகப் பணியாற்றி வந்த காளை" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

---

### பாங்காக்கில்

# மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த முபாரக்கிற்கு விபத்து!

## எம்.எம்.அப்துல்லா எம்.பி.யிடம் வைத்த கோரிக்கையையடுத்து அயலக தாய்லாந்தின் சார்பாக சென்னை அழைத்து வர நடவடிக்கை!

மயிலாடுதுறை, நவ.17-

கடந்த 29 மே 2024 அன்று பாங்காக் வந்த மயிலாடுதுறை மாவட்டம் நீடூரைச் சேர்ந்த முபாரக் அவர்களுக்கு எதிர்பாராதவிதமாக ஜூன் 17 2024 அன்று கனரக வாகனம் மோதிய விபத்தில் தலையில் அடிப்பட்டு மூளையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதனால் இரு முறை தலையில் அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு தொடர்ந்து சுயநினைவின்றி இன்றுவரை பாங்காக்கில் உள்ள லெர்ட்சின் மருத்துவமனையில் தீவிர மருத்துவ சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பல மாதங்கள் சுய நினைவின்றி இருப்பதாலும் தலையில் அறுவைச் சிகிச்சைகள் மேற்கொண்டதாலும், மருத்துவச் செலவு கடுமையாக அதிகரித்து வந்துள்ளது. எனவே தமிழ்நாடு திரும்பி அங்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற நாங்கள் மருத்துவமனையை வேண்டினோம். அவரது காயங்களின் அளவு காரணமாகவும், கோமாவில் இருப்பதாலும் ஸ்ட்ரெச்சர் படுக்கையில் வைக்கப்பட்ட நிலையில் மட்டுமே பயணிக்க முடியும் என அவர்கள் தெரிவித்தனர், இது அவரது குடும்பத்தினருக்கு மேலும் மன வருத்தத்தையும் குறிப்பிடத்தக்க நிதிச் சுமையையும் ஏற்படுத்தியது

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லாவிடம் NRTIA தாய்லாந்தின் சார்பாக கோரிக்கை வைத்தோம்.

இதனை அவர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் பாதிக்கப்பட்ட நபரை இந்தியா அழைத்துச் செல்ல அயலகத்துறையின் சார்பாக ரூ.10,41,648/- வழங்கப்பட்டது.

அவர், தாய் ஏர்வேஸ் விமானத்தில் மேல் சிகிச்சைக்காக சென்னை கொண்டு செல்ல வரப்பட இருக்கிறார்.

இது குறித்து தாயுள்ளத்தோடு துரித நடவடிக்கை எடுத்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், எம்.எம்.முகமது அப்துல்லா எம்.பி. புலம்பெயர் தமிழர்கள் மறுவாழ்வு மற்றும் நல ஆணையர் கிருஷ்ணமூர்த்தி, மறு வாழ்வு மற்றும் புலம்பெயர் தமிழர்கள் நல உதவி ஆணையர் அசோக் குமார்,

சிகிச்சைக்கு ஆதர வளித்த நலம் விரும்பிகள் ஆகிய அனைவருக்கும் NRTIA தாய்லாந்து சார்பாகவும் முபாரக் அலியின் குடும்பத்தினர் சார்பாகவும் வாழ்நாள் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.



பாங்காக்கில் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த முபாரக் என்பவருக்கு விபத்து ஏற்பட்டதை தொடர்ந்து அவரை சென்னை அழைத்து வர எம்.எம்.அப்துல்லா எம்.பி.யிடம் வைத்த கோரிக்கையையடுத்து அயலக தாய்லாந்து சார்பாக சென்னை அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.